ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

# நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர் 437) Feb (2) / 2025

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

‘ஸ்ரீ அஹோபில தாஸன்‘ க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

## உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் ......................................................................................................3

2. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)........................................................................4

3. ஸ்தோத்ர ரத்னம் (பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)...............................24

Website: www.namperumal.com email: sridharan_book@yahoo.co.in
Blog:namperumal.wordpress.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

# லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 257)

## குரு முத்திரை

73. ஸம்முகௌ ஸம்புடீக்ருத்ய த்வௌ ஹஸ்தை ஸம்ப்ரஸாரிதௌ
விநியோஜ்யௌ லலாடாக்ரே சிரஸாவநதேந து
74-1. குர்வாதி த்ரிதயஸ்யைஷா முத்ரா சேத: ப்ரஸாதிநீ

**குறிப்பு** – இது மன சாந்தியை அளிக்கும் குரு முத்திரை ஆகும்.

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

# திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 402)

6-2-2. போகு நம்பீ! உன் தாமரை புரை கண் இணையும் செவ்வாய் முறுவலும்
ஆகுலங்கள் செய்ய அழிதற்கே நோற்றோமே யாம்
தோகை மா மயிலார்கள் நின் அருள் சூடுவார் செவி ஓசை வைத்து எழ
ஆகள் போக விட்டுக் குழல் ஊது போயிருந்தே

**பொருள்** – "நாங்கள் மட்டும் இல்லை" என்ப நீங்கலாக அனைத்து விஷயங்களிலும் பரிபூர்ணமாக உள்ள நீ செல்வாயாக, இங்கே நின்று என்னைப் பார்த்தல் மற்றும் புன்முறுவல் செய்தல் போன்றவற்றைச் செய்வதான உனது தாமரை போன்ற திருக்கண்களையும், சிவந்த வாயில் தோன்றும் புன்னகையையும் கண்டு மகிழ்ந்தபடி இருக்கவேண்டிய பாக்கியம் செய்தவர்களாக, நாங்கள் நின்ற நிலையைத் தகர்த்து, எங்களைத் தடுமாறும்படியாகச் செய்து, அழிந்து போவதற்கான தவம் செய்துள்ளோமோ? தோகையை விரித்து நல்ல மயில் போன்று அலைந்த கூந்தல் கொண்டவர்கள், உனது க்ருபையைச் சூடுவார்கள் அல்லவோ? அப்படிப்பட்டவர்கள் தங்கள் காதுகளால் கேட்டு, எழுந்து வரும்படியுமாக, பசுக்களைத் தூரமாகச் செல்லும்படிச் செய்து, அவற்றை அழைப்பது போன்று, அங்கு சென்று உனது புல்லாங்குழலை ஒலிப்பாயாக.

**அவதாரிகை -** நோக்குப் பெறாதவன் முகம் பார்க்கப் பெற்றான்; வார்த்தை கேட்கப் பெறாதவன் "போ" என்னவும் பெற்றான்; இனி இதுக்கு மேற்பட க்ருதார்த்தனாகை இல்லையிறே. "போ என்றால் அவ்வார்த்தையேயன்றிறே இவன் புத்தி பண்ணுவது; அதில் அகவாயில் ஒடுகிறதும் அறியும் அவனிறே". "இன்னம் என்

கையகத் தீங்கு ஒருநாள் வருதியேல் என் சினம் தீர்வனானே" என்று இத்தை உய்ந்தபிள்ளை பாடாநிற்கச்செய்தே, காலாலே உதைப்பது, கையாலே தள்ளுவதாய் அபிநயித்துக் காட்டினார்; இத்தை எம்பார் கேட்டருளி, "அங்ஙனன்று; அது பின்னைப் பெற்றானாகில் அவன் நெடுநாள் ப்ரார்த்தித்து கிடந்ததன்றோ; ஆன பின்பு, அதன்று பொருள்" என்று முகத்தைத் திரிய வைத்துக் காட்டினார். "நீயகல நின்று பண்ணினவை எல்லாம் உன் ஸந்நிதியிலே உன்னைப் பண்ணுவேன் என்கிறாள்" என்று அருளிச்செய்தார்.

**விளக்கம்** – இவர்களால் "போகு" என்று தள்ளப்பட்ட அவனுக்கு, "தாமரை புரை கண் இணையும் செவ்வாய் முறுவலும்" என்பதாக, கண்களில் மலர்ச்சியும், புன்னகையும் ஏற்படுமோ என்பதற்கு விடை அளிக்கிறார். இதுவரை இவர்களால் பார்க்கப்படாதவன், தனது முகத்தை அவர்கள் நோக்கும்படியாக உள்ளான்; அவர்களிடமிருந்து எந்த ஒரு சொல்லையும் கேட்டறியாதவன், "போ" என்ற சொல்லைக் கேட்கப் பெற்றான்; இதற்கு மேலே இவனுக்கு நடக்க வேண்டிய செயல் ஏதும் இல்லை அல்லவோ? ஆனால், "போ" என்று தள்ளப்படும்போது, "நடக்கவேண்டிய செயல் கைகூடப் பெற்றவனாக இருந்தான்" என்று கூற முடியுமோ என்பதற்கு விடை அளிக்கிறார்; "போ" என்று கூறினால், அந்தச் சொல்லின் நேரடியான பொருளை இவன் புத்தியில் ஏற்பதில்லை. அவர்கள் உள்ளத்தில் என்ன சிந்திக்கிறார்கள் என்பதை இவன் அறிவான் அல்லவோ? இந்த இடத்தில் பெருமாள் திருமொழி (6-8) – இன்னம் என் கையகத் தீங்கு ஒருநாள் வருதியேல் என் சினம் தீர்வனானே - என்ற பாசுரத்திற்கு உள்ள நிகழ்வைக் கூறுக்றார். இந்தப் பாசுரத்திற்கு உய்ந்தபிள்ளை என்பவர் அபிநயம் செய்யும்போது, காலதாமதம் செய்து வந்த க்ருஷ்ணனை, கோபிகைகள் காலால் உதைப்பது மற்றும் கைகளால் தள்ளுவது போன்ற செயல்களைச் செய்வதாக, செய்து காண்பித்தார். இதனை எம்பார் நோக்கினார். அவர் உடனே, "இவ்விதம் அபிநயம் செய்வதும், பொருள் கூறுவதும் பொருந்தாது; காரணம், அவர்களுடைய காலும் கையும் தன் மீது படவேண்டும் என்று க்ருஷ்ணன் ஏங்கியபடி இருந்தான். இவ்விதம் இவர்கள் இதனைச் செய்தார்கள் என்றால், அவனுடைய நீண்ட நாள் கனவு நிறைவேறியதாகிவிடும். அதனைக் கோபிகைகள் விரும்பமாட்டனர். ஆகவே இது பொருள் அல்ல", என்று கூறி, தனது முகத்தை மாற்றி வைத்துக்

கொண்டு அபிநயம் செய்து காண்பித்தார். மேலும், “க்ருஷ்ணா! நீ முன்பு எங்களை செய்தவற்றை எல்லாம், நீ அருகில் உள்ளபோது, உனக்கு நாமும் செய்வோம்”, என்று கோபிகைகள் கூறுவதாக அருளிச்செய்தார்.

**அவதாரிகை -** எம்பார் தாம் பாஹ்ய விஷயங்களில் ருசி இல்லாமையாலே பதார்த்த ஜ்ஞாநம் இன்றிக்கே இருப்பர்; இப்படி இருக்கையாலே “‘ஸ்த்ரீகளுக்கு அஸாதாரணமான சிஹ்நங்களெங்ஙனேயிருக்கும்படி?' என்று சிங்கப்பிரானைக் கேட்டருளினார்” என்று ப்ரஸித்தமாயிருக்கும்; இப்படி இருக்கிறவர்தாம் “மின்னிடை மடவார்” அருளிச்செய்யப் புக்கால், “இந்த ஸந்யாஸி பிரட்டு பாடத் தொடங்கினார்” என்பராம் பிள்ளையுறங்கா வில்லிதாசர். இவருடைய பகவத் விஷயத்தில் அவகாஹநம் இருக்கும்படி! ஒரு க்ஷுத்ர விஷயத்திலே நாலு நாள் வாசனை பண்ணினார்கள் போரவிதக்தராய் இராநின்றார்கள், அவ்வளவு அல்லவிறே ஸமஸ்த கல்யாண குணாத்மகனோடே நெடுநாள் வாசனை பண்ணினார்க்கு இருக்கும்படி. எம்பார் “ஈச்வரன் முன்னே வந்து நின்றாலும் ‘வா’ என்பாரையும் கிடையாத ஸம்ஸாரத்திலே, அவனல்பம் தாழ்த்தான் என்னா ‘போ’ என்பாரைப் பெறுவதே!” என்பர்.

**விளக்கம் –** “எம்பார் தனது இல்லற வாழ்க்கையில் ஈடுபடாமல் இருந்தார். ஆகவே மற்ற விஷயங்களில் மனம் வைக்காமல், அவற்றில் ருசியும் இன்றி, பெண்கள் விஷயங்கள் குறித்த ஞானமும் இன்றி இருந்தார். இப்படி உள்ளபோது, இந்தப் பாசுரத்திற்கான வ்யாக்யானம் கூறும்போது அவர் சிங்கப்பிரான் என்பவரிடம், ‘பெண்களுக்கே உரிய அடையாளங்கள் எப்படி இருக்கும்?’, என்று வினவினார். இப்படி உள்ள ஒருவர் ‘மின்னிடை மடவார்’ என்று இந்தப் பாசுரத்திற்கான பொருளை அருளிச்செய்யும்போது, இந்த ஸந்யாஸி கபடமாக உரைத்தார் என்றே கொள்ளவேண்டும்” என்று பிள்ளை உறங்காவில்லிதாஸர் அருளிச்செய்வார். எம்பார் இவ்விதம் உரைத்ததன் காரணம், பகவத் விஷயத்தில் ஆழமாக மூழ்கியபடி உள்ளதால் ஆகும். ஆனால், பகவத் விஷயத்தில் இவ்விதம் ஆழமாக நின்றால், ச்ருங்கார விஷயங்களும் புலப்படுமோ என்பதற்கு விடை அருளிச்செய்கிறார். ஒரு தாழ்ந்த விஷயத்தில் நான்கு நாட்கள் ஈடுபட்டு நிற்பதன் விளைவாக, நன்கு தேர்ச்சி பெற்றவர்களாக, உலகில் உள்ளவர்கள் இருக்கிறார்கள்; ஆயினும் நீண்டநாட்கள் அனைத்துவிதமான திருக்கல்யாண குணங்களையும் கொண்ட ஸர்வேச்வரன்

விஷயத்தில் அது போன்ற வாஸனையுடன் இருந்தார்கள் என்றாலும், அவனிடம் ஈடுபாடு பிறப்பதில்லை; இவருக்கு அப்படி அல்ல. இங்கு எம்பார், "ஸர்வேச்வரன் தங்கள் முன்பாக வந்து நின்றாலும் 'வா' என்று அழைக்காதபடி இந்த ஸம்ஸார உலகம் உள்ளது. இப்படி உள்ளபோது, அவன் வருவதற்குச் சிறிது காலதாமதம் செய்தான் என்பதால் 'போ' என்று கூறும்படி இவர்களுடைய ஈடுபாடும், இவர்களும் உள்ளனரே", என்றார்.

**வ்யாக்யானம் -** (போகு நம்பீ) "போகுநம்பீ" என்று முன்பே சொல்லச் செய்தே, திரியவும் சொல்லும்போது ஒன்று இரண்டடி வரவிட்டுக் கிட்ட நின்றானாக வேணுமிறே. வாரீர்! எத்தனை பேரைத் தீண்டிவந்தீரென்று தெரியாது; புடைவை படாமே கடக்க நில்லும் என்றாள். "போ" என்ன வர நிற்கக் கடவன், "தீண்டாதே கொள்ளும்" என்றால் என்படுமோ! (நம்பீ) எளியார் செய்வதை நீர் செய்யக்கடவீரோ? நீர் நிரபேக்ஷரன்றோ? (நம்பீ) எங்கள் பக்கலில் இப்படிக் கால்தாழ்க்க நீரேதேனும் குறைவாளரோ? நாங்கள் வேண்டியிருந்ததோ உமக்கு? "உயிரினாற் குறைவிலம்" என்று ஏறாளுமிறையோனிலே, தம்மை அழிக்கப் பார்த்தார்; அது அவனுண்டாகையாலே அழிந்ததில்லை; "மாசறு சோதி"யிலே அதுக்கடியான அவன் தன்னை அழிக்கப் பார்த்தார்; இங்கு அவன் வரக் கொள்ள, "போ" என்னாநின்றார்; இதுக்கடி என்னென்று அறிகிறிலோம். இவர்கள் இப்படி "நம்பீ" என்று சொல்லி இருக்கையாவது, இக்கோஷ்டிக்கு அநர்ஹனாகையிறே. தாழ்ச்சியே மேன்மையாம் இடத்தில் முதன்மை கொண்டாடுகை போராதே.

**விளக்கம் –** (போகு நம்பீ) – "போகு நம்பீ" என்று முன்பே உரைத்தனர். ஆயினும் இந்தப் பாசுரத்தில் மீண்டும் ஏன் கூறினார்கள்? அவ்விதம் உரைத்த பின்னரும், அவன் ஒன்று இரண்டு அடிகள் அருகில் வரும்படியாக நிற்கவே, அதன் பின்னர் மீண்டும் உரைத்தனர். "வருவாயாக! நீ எத்தனை பேரைத் தீண்டிய பின்னர் இங்கு வந்தாய். அது எமக்குத் தெரியாது. புடைவை படாமல் தள்ளி நிற்பாயாக" என்றாள். "போ" என்று கூறினாலும் வருபவன், "தீண்டாமல் இருப்பாயாக" என்று கூறினால் என்ன செய்வான்; நிச்சயம் தீண்டுவான். அடுத்து "நம்பீ" என்பதற்கு பரிபூர்ணமானவன் என்ற பொருளை அருளிச்செய்கிறார்; (நம்பீ) - ஏதும் அற்றவர்கள் செய்யக்கடவதை நீ செய்வாயோ? நீ எதனையும் எதிர்பாராதவன் அல்லவோ? (நம்பீ) - எங்களிடம் நீ இவ்விதம் கெஞ்சியபடி இருப்பதற்கு, நீ

ஏதேனும் குறைவாகக் கொண்டவனோ? உமக்கு ஏதேனும் அளிப்பதற்கு நாங்கள் அவசியமோ? "ஏறாளும் இறையோன்" என்ற திருவாய்மொழியில் உள்ள "உயிரினாற் குறைவிலம்" என்ற பாசுரத்தில், தன்னைத் தானே அழித்துக் கொள்வதற்கு முயன்றார்; ஆனால் அவன் இருந்த காரணத்தால், இவர் அழியவில்லை. அடுத்து, "மாசறு சோதி" என்ற திருவாய்மொழியில், தனது இந்த நிலைக்கான காரணமாக உள்ள அவனை அழிக்க முயன்றார்; இங்கு அவன் வரும்போது, "போ" என்று கூறினார்; இவை அனைத்திற்கும் என்ன காரணம் என்று அறியவில்லை. "கடியன், கொடியன்" என்பது போன்ற கடுமையான சொற்களைக் கூறாமல், "நம்பீ" என்னும் சொல்லானது கொண்டாட்டமாகவே அல்லவோ உள்ளது? இது உறவை அறுப்பதற்கான சொல்லாகத் தோன்றவில்லையே என்பதற்கு விடை அருளிச்செய்கிறார்; இவர்கள் இவ்விதம் "நம்பீ" என்று கூறுவது, இவன் இவர்களுடைய கோஷ்டிக்குச் சேரத் தகுதியற்றவன் என்பதால் ஆகும்; ஏனென்றால், தாழ்ச்சி என்பதே மேன்மையாகும் இடத்தில், முதன்மையைக் கொண்டாடுதல் என்பது எப்படி நிகழும்?

**வ்யாக்யானம்** - (உன் தாமரை புரை கண்ணிணையும் செவ்வாய் முறுவலும்) காணப் பெறாதே விடாய்த்து உறவின கண்களும், கண்டு செவ்வி பெற்றுக் குளிர்ந்தன; அகவாயில் ஹர்ஷத்துக்குப் போக்காக ஸ்மிதம் பண்ணவும் பெற்றான். இவர்கள் நிஷேத வசநமாகிற அம்ருத பாநத்தாலே அவனுக்குப் பிறந்த வேறுபாடு இருக்கிறபடி. "வா" என்பாரையும் கூடக் கிடையாத ஸம்ஸாரத்திலே "போ" என்பாரைக் கிடையாதிறே. ஒரு ப்ரயோஜநத்துக்காகவும் தன்னை வேண்டுவார் இன்றிக்கே இருக்கிறவிடத்தே, தன்னையே ப்ரயோஜநமாகப் பற்றி இப்படிப் படுவாரைக் கிடையாதிறே.

**விளக்கம்** – (உன் தாமரை புரை கண்ணிணையும் செவ்வாய் முறுவலும்) – இவனைப் பிரிந்து இவர்கள் நிற்கும்போதிலும், அவன் கண்கள் மலர்ந்தது ஏன் என்பதற்கு "அவர்களுடைய பார்வை கிட்டப் பெறாமல் தளர்ந்து நிற்பவன், அவர்கள் தன்னுடைய முகத்தைப் பார்த்த ஒரு காரணத்தால் மட்டுமே மிகவும் மகிழ்ந்தான்" என்று அவதாரிகையில் ஒரு காரணம் கூறினார். மேலும் ஒரு காரணத்தை இங்கு கூறுகிறார்; அவர்களால் காணப்பெறாமல் தவித்து துடித்த கண்கள், இவர்கள் தன்னைக் காண்பதைக் கண்டு மலர்ந்து குளிர்ந்தான்;

உள்ளத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சி வெளிப்படும்படி புன்முறுவல் செய்து நின்றான். ஆனால் இவர்கள் “போ” என்று தள்ளும்போது மகிழ்ச்சி தோன்றுவது ஏன்? அந்தச் சொல்லானது அமிர்த பானம் பருகினால் ஏற்படும் வேறுபாட்டை இவனுக்கு உண்டாக்கியது போன்று ஆனது. இவனை “வா” என்று அழைக்காத ஸம்ஸார உலகில், “போ” என்று கூறுபவர்கள் நிச்சயம் இருக்கமாட்டனர். எந்த ஒரு பலனுக்காகவும் தன்னை வேண்டுபவர்கள் இல்லாமல் உள்ள இடத்தில், தன்னையே பயனாகக் கொள்ளும் இப்படிப்பட்டவர்கள் வேறு எங்கும் கிடையாது அல்லவோ?

**வ்யாக்யானம்** - (ஆகுலங்கள் செய்ய) ஆகுலம் - பூசலும், வருத்தமும், துக்கமும். ஹேது இரண்டாயிருக்கச் செய்தே, ஸர்வகரணங்களும் அழியாநின்றது. அவனுக்கு ஒன்றிரண்டாயிற்று விக்ருதமாயிற்று; இவர்களுக்கு ஸர்வாவயவங்களும் விக்ருதமாயிற்று. அணு அழிக்குமாபோலன்றிறே விபு அழிப்பது. “வாரிகோள்! உங்களுக்கென்னோடு ஒன்றில்லை என்னாநின்றிகோள். பாவபந்தம் உடையாரைப் போலே வார்த்தை சொல்லாநின்றிகோள்; வ்யாஹதமாயிருந்ததீ! “போகு நம்பீ” என்னா நின்றிகோள்; “ஆகுலங்கள் செய்ய” என்னா நின்றிகோள்; இதுக்கடியென்?” என்றான். “வாராய்! நாங்கள்தாம் பாவபந்தமுண்டாய்ச் செய்கிறோம் என்றிருக்கிறாயோ? சந்த்ர தர்சநத்தில் சந்த்ரகாந்தம் உருகுகிறது என்ன பாவபந்தமுண்டாய்? ‘அவச்யமநு போக்தவ்யம்’ என்கிற விதியைத் தப்பவொண்ணுமோ?”. (அழிதற்கே நோற்றோமேயாம்) எங்களுக்கிது ப்ரக்ருதிகாண். இளையபெருமாள் காடேறப் போகாத அன்றன்றோ எங்களால் அழியாதிருக்கலாவது? “ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய" இறே. நோன்பாகிறது பூர்வஜந்மத்தில் உள்ளதிறே.

**விளக்கம்** – (ஆகுலங்கள் செய்ய) - அவன் இவர்களை வருத்துவதற்கான காரணம் திருக்கண்கள் மற்றும் அழகான வாய் என்று இரண்டாக உள்ளன. அதன் மூலம் இவர்களுடைய அனைத்து உறுப்புகளும் தளர்ந்தன. அவனுக்கு ஒன்று அல்லது இரண்டு மட்டுமே தளர்ந்து வேறுபட்டு நின்றன. இவர்களுக்கு அனைத்து உடல் உறுப்புக்களும் தளர்ந்து வேறுபட்டு நின்றன. இவ்விதம் வேறுபட்டதன் காரணம் என்ன? ஆத்மா மற்றவர்களை உருக வைப்பது போன்று அல்லவே ஸர்வேச்வரனுடைய செயல்கள்! ஆகுலம் என்பது மாறுதல்கள். இவன்

அவர்களிடம், "வாரீர் பெண்களே! உங்களுக்கு என்னுடன் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை என்று கூறினீர்கள். மனப்பற்று கொண்டவர்கள் போன்று ஏதும் கூறவில்லை. உங்களுடைய செயல்கள் முரண்பாடாக உள்ளனவே! முதலில் என்னை 'போகு நம்பீ' என்று கூறுனீர்கள். இப்போது, 'எங்களுக்கு மாற்றங்களை ஏற்படுத்துகிறாய்' என்கிறீர்கள். இந்த முரண்பாட்டின் காரணம் என்ன?", என்றான். இதனைக் கேட்ட இவர்கள் அவனிடம், "ஓய் வாரும்! நாங்கள் உன்னிடம் மனப்பற்று கொண்டவர்களாக உள்ளோம் என்று எண்ணிகிறாயா? சந்த்ரனைக் கண்ட சந்த்ரகாந்தம் என்னும் கல்லானது உருகுவதில் என்ன பற்றுதலைக் காண இயலும்? 'அவச்யமநு போக்தவ்யம் - அவசியம் அனுபவித்தே தீரவேண்டும்' என்றுள்ள விதியிலிருந்து யாரும் தப்ப இயலுமா? (அழிதற்கே நோற்றோமேயாம்) - எங்களுக்கு இத்தகைய மாறுதல்கள் இயல்பானது ஆகும். லக்ஷ்மணன் கானகம் செல்லாமல் இருந்தால் அல்லவோ நாங்கள் இவ்விதம் தளராமல் இருப்போம்? அதுவும் நடக்கப் போவதில்லை, எங்களால் தளராமலும் இருக்க இயலப்போவதில்லை. அயோத்யாகாண்டம் (40-5) - ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய - ஸுமந்த்ரன் லக்ஷ்மணனிடம், "நீ கானகத்தில் இருப்பதற்காகவே படைக்கப்பட்டாய்" என்றான் அல்லவோ? நோன்பு என்பது முற்பிறவியிலிருந்து தொடர்ந்தபடி உள்ளது அல்லவோ?", என்றனர்.

**வ்யாக்யானம்** - இவர்கள் இப்படி சொன்னவாறே, "அவ்வழிவு ஸம்ச்லேஷார்த்தமிறே" என்று பார்த்து, அவன், "நம் தர்சநத்திலே இத்தனை வேறுபாடு உண்டான பின்பு மேலுள்ளதெல்லாம் செய்து கொள்ளிகோளோ!" என்றான்; அதுவோ உன் நினைவு! நாங்கள் அவர்களல்லோம் காண்! நாங்கள் இங்ஙனே அழிந்தேபோக நோற்றோம் காண்! (யாம்) உன்னைப் பிரிந்தால் கலக்கைக்கு நோற்றார் வேறே சிலர் காணென்கிறாள் நெடும்போது இவர்கள் பேச்சுக் கேட்கையால் உண்டான ஹர்ஷந் தோற்றப் பார்த்துக் கொடு நின்றான்; "நம் தர்சநம் இவனுக்கு ஆச்வாஸ ஹேதுவாய் இருந்தது" என்னா, முகத்தை மாறிப் பின்னோக்கி இருந்தாள்; அவ்வளவில் அவன் நெஞ்சிலே மயிர்பாடு உண்டாயிற்று. (தோகை மாமயிலார்கள்) "நம் வைவர்ண்யமும் கண்ணநீரும் இவன் காண்பானல்லன்; தைவ யோகத்தால் காணுமவற்றை நம்மால் செய்யலாவதில்லையிறே" என்னாத் திரிய இருந்தாள்; அதுதானே இவனுக்குக் கார்யமாயிற்று. பெருக்காற்றை எதிர் செறிப்பாரைப் போலே, கண்ணுங்

கண்ணீரும், பேணாத வடிவுங்கண்டால் அவன் ஆற்ற மாட்டான். முறுவலுக்கும் கண்ணுக்கும் இலக்காய் அழிந்து போகாதே, திரியவிருந்ததும் நின்று அநுபவிக்கைக்கு உடலாயிற்று.

**விளக்கம்** - இவர்கள் இவ்விதம் கூறியவுடன், "இத்தகைய அழிவு என்பது சேர்க்கைகாக அலல்வோ?", என்று இவன் தீர்மானித்தான். அவர்களிடம் இவன், "நம்மைக் கண்ட பின்னர் இந்த அளவிற்கு உங்களுக்குள் வேறுபாடுடன் எழுகின்றன. ஆகவே மேலும் செய்யவேண்டியவற்றைச் செய்யலாம் அல்லவோ?", என்றான். இதனைக் கேட்ட அவர்கள், "இப்படியாக உனது எண்ணங்கள் உள்ளனவோ? நாங்கள் அவர்கள் அல்லர் என்று அறிவாயாக. நாங்கள் இப்படியே அழிந்து போவதற்கும் தயாராகவே நோன்பு நோற்றோம் என்று தெளிவாயாக", என்றனர்; அதாவது அவன், "மேல் உள்ளதெல்லாம்" என்பதன் மூலம், " நீங்கள் நோற்ற நோன்பானது, உங்களுக்கு என்னுடைய சேர்க்கையை ஏற்படுத்தும் அல்லவோ?", என்று கேட்டான்; இதற்கு இவர்கள் இவ்விதம் விடை அளித்தனர். (யாம்) – "உன்னைப் பிரிய நேர்ந்தால் மீண்டும் சேரவேண்டும் என்ற ஆசையில் நோன்பு நோற்றவர்கள் வேறு சிலர், நாங்கள் அல்லர்", என்கிறாள். இவர்கள் இவனுடன் நீண்ட நேரம் இவ்விதமாக உரையாடி இருந்ததால், இவர்கள் பேச்சு கேட்பதால் ஏற்பட்ட மகிழ்ச்சியானது தனது முகத்தில் தோன்றும்படியாக, இவர்களைப் பார்த்தபடி நின்றான். இதனை உணர்ந்த நாயகி, "நம்மைக் காண்பது என்பது இவனுக்குத் தரித்திருக்கக் காரணமாக உள்ளது" என்று எண்ணியவளாக, தனது முகத்தைத் திருப்பி, பின்புறம் பார்த்து நின்றாள். இதனைக் கண்டவுடன் அவன் மனதில் துடிப்பு ஏற்பட்டது. (தோகை மாமயிலார்கள்) - இவள் தனது மனதில், "நம்முடைய பசுமை நிறத்தையும், கண்ணீரையும் இவன் பார்த்துவிடுவான். ஆனால் விதி வசத்தால் இவன் அவற்றை காண்பதற்கு நாம் ஏதும் செய்ய இயலாது", என்று எண்ணியவளாகத் திரும்பி நின்றாள். அதுவே இவன் நினைத்த கார்யமாக அமைந்துவிட்டது. ஆனால், அவள் தனது முகத்தைக் காண்பிக்காமல் திரும்பி நின்ற செயலானது, இவனுக்கு ஏற்ற கார்யமாக எவ்விதம் அமைந்தது? இதற்கு விடை அளிக்கிறார். பெரும் காற்றை எதிர்ப்பவர்கள் போன்று, கண்ணும் கண்ணீருமாக, சரியாகப் பேணாத சரீரமுமாக நிற்கும் இவளை அவன் பார்த்தால், அவன் பொறுக்கமாட்டான். மேலும், அவளுடைய

புன்றுவலுக்கும், கண் அழகிற்கும் அழிவது இவன் இயல்பாகும். ஆகவே இவள் திரும்பியதும், இவளுடைய கூந்தல் அழகைக் கண்டு அனுபவித்துத் தரிப்பதற்கான வாய்ப்பு இவனுக்குக் கிடைத்தது.

**வ்யாக்யானம்** - "நங்கார்யம் தலையாகப் போயிற்று" என்று இருக்கிறானிறே அவன். "ஊருப்யாமுதரம் சாத்ய பாஹுப்யாஞ்ச பயோதரௌ" என்று கொண்டு "அவனுடைமை ஆஸுர ப்ரக்ருதிகள் காணவொண்ணாது" என்று மறைக்கக் கடவ அவள், "இவன்தான் காணவொண்ணாது" என்று மறைக்கும்படி காணும், ப்ரணயகோபம் தலை மண்டை இட்டபடி. (தோகை மாமயிலார்கள்) "நீலநாகாபயா வேண்யா" என்று, பேணாத குழலிருக்கிறபடியைக் கண்டான்; "நீங்கள் முன்னமானாராகிடுக; இதொரு மயிர்முடி இருந்தபடி என்தான்!" என்றான். இவள்தான் ஓதி நல்லளாயிருக்குமே; இவன் கூழை ஆகையாலே கொண்டாடுமே. "குழல் கூழை ஓதி" இறே குழலென்றும், கூழையென்றும், ஓதியென்றும் மயிர்முடி" இறே. எங்கள் மயிர்முடியைக் கண்டு தந்தாம் மயிர்முடி என்று ப்ரமிக்கும்படி பண்ணுவதே அவர்கள் சிலர்! அபிமத விஷயத்தைப் பிரிந்தால் கண்டதெல்லாம் அதுவாய்த் தோற்றுமிறே என்றார்கள். தோகை விரித்த நல்ல மயில் போலே அலைந்த குழலை உடையவர்கள். "அங்ஙனே சிலருண்டோ?" என்றான். (நின்னருள் சூடுவார்) உன்னோடு ஸம்ச்லேஷித்துப் பிரிவிலே இப்படிப் பிச்சேறும்படிப் பண்ணினவர்கள். அவர்களைப் பிரிந்து நோவுபடாதே அவர்களோடே ஸம்ச்லேஷி. "ஆனால் அதுக்கென்? அவர்களைப் பெறுகைக்கு ஒரு விரகு பெறுந்தனையும் நான் இங்ஙனே சற்றுப்போது இருந்து போகிறேன்" என்றான். உனக்கு இங்ஙன் விரகற்றுப் போகவேண்டுமோ? நீ கைகண்டத்தை ப்ரயோகி; "அதெது?" என்ன.

**விளக்கம்** – இவள் இவ்விதம் திரும்பியதும், "நம்முடைய கார்யமானது இவ்விதம் ஆயிற்று", என்று நின்றான். ஆனால் இவர்கள், அவனால் அனுபவிக்கப்படவேண்டிய அவயவங்களை மறைக்கலாமா என்பதற்கு விடை அளிக்கிறார்; ஸுந்தரகாண்டம் (19-3) – ஊருப்யாமுதரம் சாத்ய பாஹுப்யாஞ்ச பயோதரௌ - ஸீதை தனது தொடைகளால் வயிற்றையும், திருக்கரங்களால் ஸ்தனங்களையும் மறைத்தபடி உள்ளாள் - என்பதற்கு ஏற்ப, "அவனுக்கு உடைமையான இந்த உடல் உறுப்புகளை அஸுரர்கள் காணக்கூடாது" என்று

மறைத்தாள். இப்படிப்பட்ட அவள், இன்று தனது மனதில், “இவன் இவற்றைக் காணக்கூடாது” என்று மறைத்தாள்; காரணம், ப்ரணய கோபத்தால் ஆகும். (தோகை மாமயிலார்கள்) - ஸுந்தரகாண்டம் (13-25) - நீலநாகாபயா வேண்யா – கறுத்த ஸர்ப்பம் போன்ற பின்னல் - என்பதாக, சரியாகப் பேணாத கூந்தலைக் கண்டான். இதற்கு இவன், “நீங்கள் முன்னோக்கி நின்றாலும், பின்னோக்கி நின்றாலும் நமக்குப் பாதகம் இல்லை. இப்படி ஒரு கூந்தல் உள்ளது ஏன்?”, என்றான். இவன் இவ்விதம் கொண்டாடுவதற்குக் காரணம், இவளுடைய கூந்தலின் மேன்மை ஆகிறது; இதன் காரணம், இவளுடைய கூந்தலானது நன்கு படிந்து இருக்கும்படி வைத்திருப்பவள் ஆவாள். கூழை என்பது, “கூந்தலின் மேன்மை அறிந்தவனும், சபலனும்” என்ற பொருளில் வந்தது. இவ்விதம் இவளுடைய அழகையும் மேன்மையையும் அறிந்தவன் என்பதால் கொண்டாடுகிறான். குழல், ஓதி மற்றும் கூழை ஆகியவை, கூந்தலைக் குறிக்கும் என்பதை நிகண்டுவில் உள்ள “குழல் கூழை ஓதி” என்பதால் காண்பிக்கிறார். “எங்களுடைய கூந்தலைக் கண்டவுடன், அவர்கள் கூந்தலாக எண்ணி ப்ரமித்து நிற்கும்படி உள்ளானோ”, என்றனர். இதற்கு ஒரு சிலர், “அவர்களுடைய கூந்தலின் மேன்மையால் மட்டும் அல்ல, இவன் தனது ஈடுபாட்டாலும் இவ்விதம் உள்ளான். தனக்குப் பிடித்த ஒரு விஷயத்தை விட்டுப் பிரிய நேர்ந்தால், காண்பவை அனைத்தும் அந்த விஷயமாகவே தென்படும்”, என்று கூறினர். தோகையை விரித்த நல்ல மயிலைப் போன்ற அலைந்த கூந்தல் கொண்டவர்கள். “அப்படியும் நமக்குப் பிடித்த சிலர் அங்கு உள்ளனரா?” என்றான். (நின்னருள் சூடுவார்) - இதற்கு இவர்கள், “அவர்கள் உன்னுடன் கலந்து பிரிந்து விட்டதால், உனக்கு இவ்விதம் மனத் தடுமாற்றம் உண்டாகும்படிச் செய்தவர்கள் ஆவர். அவர்களைப் பிரிந்து நீ துன்பம் அடையவேண்டாம். அவர்களுடன் சென்று நீ கலப்பாயாக”, என்றனர். உடனே இவன், “அதனால் என்ன? அவர்களை நான் மீண்டும் அடைவதற்குத் தக்க ஒரு வழி ஏற்படும் காலம் முடிய நான் இப்படியே இங்கு சிறிது நேரம் இருந்து செல்கிறேன்”, என்றான். உடனே இவர்கள், “அப்படியே உனக்கு வழி ஏற்படாமல் போகுமோ? உனது அனுபவத்தையும், திருக்கரத்தில் உள்ள புல்லாங்குழலையும் பயன்படுத்துவாயாக”, என்றனர். உடனே இவன், “அனுபவமும் புல்லாங்குழலும் பயன்படுமோ? அது எப்படி?”, என்றான். இதற்கு அடுத்து விடை அளிக்கிறாள்.

**வ்யாக்யானம் -** (செவியோசை வைத்தெழக் குழலூது) "எங்களுக்கே ஒருநாள் வந்து ஊத உன் குழலின்னிசை போதராதே" என்று இருக்குமவர்கள்; நீ குழலூதினால் அது சென்று செவிப்படும். அநந்தரத்தே வருவர்கள் காண். ஸர்ப்ப யாகத்தில் ஸர்ப்பங்கள் வந்து விழுமாபோலே. நீ குழலூதவே பெண்களடங்கலும் உன் காற்கீழே வந்து விழுங்காண்! "குழலோசை கேட்பது எப்போதோ?" என்று செவி கொடுத்துக் காண் அவர்களிருப்பது. உன்னைப் பிரிந்தார் ஸர்வகரணங்களும் உன் மேலே வைத்திருப்பார்கள் காண். "தூவலம் புரியுடைய திருமால் தூயவாயில் குழலோசை வழியே கோவலர் சிறுமியர் இளங்கொங்கை குதுகலிப்ப உடலுள் அவிழ்ந்தெங்கும் காவலும் கடந்து கயிறு மாலையாகி வந்து கவிழ்ந்து நின்றனர்" என்று நீ குழலூதப்புக்கால் நிற்பாருண்டோ? உன் காற்கீழே வந்து விழுவர்காண்! அத்தைச்செய் என்றாள்.

**விளக்கம்** – (செவியோசை வைத்தெழக் குழலூது) - அதாவது, "அவர்கள் வேறு ஒன்றில் எண்ணம் கொண்டபடி உள்ளனர். இந்நிலையில் நான் சென்று குழல் ஊதினால், அவர்களுடைய செவியில் அந்த ஓசையானது தாக்கத்தை ஏற்படுத்துமோ", என்றான். இதற்கு இவள், "நீ எங்கும் உள்ளவனாக இருக்கிறாய். அதன் விளைவாக உனது புல்லாங்குழல் ஓசையும், அனைவருக்கும் கேட்பதாகவே உள்ளது. ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட இடத்தில் நீ ஊதும்போது நாங்கள் வந்து கேட்கும்படியான நிலை உள்ளது என்றால், நீ குழல் ஊதும்போது, அவர்களுடைய செவியில் நிச்சயமாகக் கேட்கும். ஜனமேஜயன் நடத்திய ஸர்ப்ப யாகத்தில் அனைத்து ஸர்ப்பங்களும் வந்து விழுந்தது போன்று, நீ குழல் ஊதினால் அனைத்து பெண்களும் உனது திருவடிகளில் வந்து விழுவதைக் காண்பாயாக. உனது குழலின் ஓசை எப்போது கேட்கும் என்று தங்களுடைய செவியைத் தீட்டி வைத்துள்ளனர். உன்னை விட்டுப் பிரிந்தவர்கள், தங்களுடைய அனைத்து புலன்களையும் உன் மீது வைத்துள்ளனர். பெரியாழ்வார் திருமொழி (3-6-1) – தூவலம்புரியுடைய திருமால் தூயவாயில் குழலோசை வழியே கோவலர் சிறுமியர் இளங்கொங்கை குதுகலிப்ப உடலுள் அவிழ்ந்தெங்கும் காவலும் கடந்து கயிறு மாலையாகி வந்து கவிழ்ந்து நின்றனர் - என்பதாக, நீ குழல் ஊதத் தொடங்கினால், தாங்கள் நிற்கும் இடத்தில் தொடர்ந்து நிற்பவர்களும் உண்டோ? உனது திருவடிகளில் வந்து விழுவார்கள் அல்லவோ? அதனைச் செய்வாயாக", என்றாள்.

**வ்யாக்யானம்** – “அதெனக்கொரு விரகன்று; ‘கொங்கு நறுங்குழலார்களோடு குழைந்து குழல் இனிதூதி வந்தாய்’ என்று ஒத்த தரத்தில் பெண்களுந்தானும் கலக்கைக்காக அவர்களை அழைத்துக் குழலூதாநின்றான் என்பர்கள்; நான் குழலூதுகை பெண்களை யழைக்கையென்று ப்ரசித்தம். அதெனக்கிடன்று” என்றான். ஆகில் உனக்கொரு நல்விரகு சொல்லக் கேள்; (ஆகள் போகவிட்டு) பசுக்களைக் கைகழிய விடுவது, அநந்தரத்தே குழலையூதுவதா? “அறியாதார் பசுக்களை மறிக்க ஊதினானென்றிருப்பர்கள்; அதறிந்து போரும் பெண்கள் உன் பக்கலிலே வந்து கிட்டுவர்கள். இதுதான் உனக்கு ஜாத்யுசித வ்ருத்தியுமிறே. “தீங்குழலூதிற்றும் நிரைமேய்த்தது”மிறே. ஆனபின்பு அத்தைச் செய்” என்றாள். “அநுஷ்டேயமான உபாய ஸ்வரூபம் இருக்கும்படி அறிந்தோம்; அநுஷ்டாந ப்ரகாரத்துக்கு ஈடான உபதேசம் பெற்றோம்; இனி உபேயாம்சத்தில் கைப்படாதது இல்லை; இனி நமக்கொரு குறையில்லை” என்று பார்த்து அவ்விடந்தன்னிலே இருந்து ஊதப் புக்கான்.

**விளக்கம்** – இதனைக் கேட்ட இவன், “நீங்கள் கூறுவது சரியான வழியல்ல. பெருமாள் திருமொழி (6-9) – கொங்கு நறுங்குழலார்களோடு குழைந்து குழல் இனிது ஊதி வந்தாய் – இனியதாகக் குழல் ஊதி, பரிமளம் மற்றும் அழகு நிறைந்த கூந்தல் உடையவர்களுடன் ஒரு நீராகக் கலந்து வந்தாய் - என்பதற்கு ஏற்ப, ஒரே போன்ற தன்மைகள் கொண்ட பெண்களுடன் கலப்பதற்காக, அவர்க்ளை அழைத்து, குழல் ஊதியபடி உள்ளான் என்று என்னைக் கூறுவர். நான் குழல் இசைப்பதே பெண்களை அழைப்பதற்கு என்பதாகவே அனைவரும் அறிவர். ஆகவே அது எனக்கு ஈடல்ல”, என்றான். இவள் அவனிடம், “அப்படியெனில் மேலும் நல்ல வழி ஒன்று கூறுகிறேன். கேட்பாயாக”, என்று கூறத் தொடங்கிறாள். (ஆகள் போகவிட்டு) - முதலில் பசுக்களை உனது பார்வையிலிருந்து தப்ப விடுவாயாக. அதன் பின்னர் அவற்றை அழைப்பதற்காகக் குழலை ஊதவேண்டும். இதனை அறிந்தவர்கள், பசுக்களை அழைப்பதற்காக நீ குழலை ஊதுவதாக எண்ணுவார்கள். உனது உள்நோக்கத்தை அறியும் பெண்கள் உன்னிடம் வந்து நிற்பார்கள்”, என்றாள். இதற்கு இவன், “இதற்குப் பசுக்களை மேய்த்து நான் திரிய வேண்டுமோ?”, என்றான். உடனே இவள், “இதுதான் உனது குலத்திற்கு ஏற்ற தொழில் அல்லவோ? திருவாய்மொழி (6-4-2) – தீங்குழல் ஊதிற்றும் நிரை மேய்த்ததும் - என்று அல்லவோ கூறுவர்? ஆகவே இதனைச் செய்வாயாக”,

என்றாள். இதனைக் கேட்ட இவன் தனது மனதில், “செய்யவேண்டிய உபாயமான, குழல் ஊதுகை குறித்துத் தெளிந்தோம். பசுக்களைத் தப்ப விடுதல் என்பதாக, அந்த உபாயத்திற்கான செயலையும் அறிந்தேன். இனி கைக்கொள்ளப்படக்கூடிய பயனில் எந்தத் தடையும் இல்லை. இனி நமக்கு எந்தக் குறையும் இல்லை”, என்று எண்ணியவனாக, அந்த இடத்தில் குழல் ஊதியபடி நின்றான்.

**வ்யாக்யானம்** - இனித்தான் வித்யதிக்ரமம் பண்ணும் அவனன்றே; “தோகை மாமயிலார்கள் செவியோசை வைத்தெழ” என்றிறே இவர்கள் சொல்லிற்று; “இன்னவிடத்தே” என்று சொல்லிற்றிலர்களே! இங்கே இருந்து ஊதத் தொடங்கினான். “அதுவோ பார்த்தபடி; நீ துடியாமைக்கு ஒரு விரகு சொன்னோமாகில் அத்தை இங்கே கொள்ளப் பார்த்தாயோ? (குழலூது போயிருந்தே) உனக்குப் பெண்கள் படும் வாய்ப்புள்ள இடங்களிலே போயிருந்து ஊதப்பாராய்! (தோகை மாமயிலார்கள்) இவன் ஓதியுணர்ந்தவ னாகையாலே கொண்டாடத் தொடங்கினான்; “இவன் ஓதியுணராமலிறே நங்குழலை இப்படிக் கொண்டாடுகிறது” என்று, “இது ப்ராமக வாக்யம்” என்று அவர்கள் அந்யதாகரிக்கிறார்கள். தலையான பேச்சையிறே இவர்கள் அந்யதாகரிக்கிறது.

**விளக்கம்** – இவர்கள் கூறியதைக் கேட்டு இவ்விதம் இவன் குழல் ஊத வேண்டுமோ என்றால், விதிகளை மீறி எந்த ஒரு செயலையும் செய்பவன் அல்லன் என்பதால் ஆகும். இந்தப் பாசுரத்தில் “தோகை மாமயிலார்கள் செவியோசை வைத்து எழ” என்று அல்லவோ இவர்கள் கூறினார்கள்? “இந்த இடத்தில்” என்று கூறவில்லை. ஆகவே அங்கேயே நின்றபடி ஊதத் தொடங்கினான். உடனே இவர்கள், “இப்படியாக நீ எண்ணிப் பார்க்கிறாய்? நீ துடித்தபடி இருக்கக்கூடாது என்பதற்காக ஒரு வழியைக் கூறினோம். உடனே அதனை இந்த இடத்திலேயே நிறைவேற்றப் பார்க்கிறாயோ?”, என்றனர். (குழல் ஊது) - உனக்குப் பெண்கள் படியும் வாய்ப்பு கொண்ட இடங்களில் சென்று ஊதுவாயாக. (தோகை மாமயிலார்கள்) - இவன் இவர்களுடைய கூந்தலின் மேன்மை மற்றும் பெருமைகளை அறிந்தவன் என்பதால், அவற்றைக் கொண்டாடத் தொடங்கினான். இதனைக் கண்ட இவர்கள், “இவன் நம்முடைய கூந்தலை அனுபவித்து அறியாமல் உள்ளபோதே இவ்விதம் வர்ணிக்கிறானே” என்று எண்ணினார்கள்; உடனே

அவர்கள், "இது மயக்கம் கொண்டவன் கூறும் சொற்கள் ஆகும்" என்று வேறுபட்டு நின்றனர். உயர்ந்த விஷயம் மற்றும் தங்கள் தலையைக் குறித்த விஷயம் என்பதை அல்லவோ தள்ளுகிறார்கள்?

**வ்யாக்யானம்** - (செவியோசை வைத்தெழ) குழலோசையைச் செவியிலே வைத்துக் கொண்டு வா. (ஆகள் போகவிட்டுக் குழலூது) பசுக்களைப் போகவிட்டுக் குழலூது. ஊதவே, உன் நினைவும் முடிந்து பசுக்களின் வயிறும் நிறையும். "செவியோசை வைத்தெழுகை பலமாய், குழலூதுகை உபாயமாயிருந்தது; அதுதான் அபிமத விஷயத்தைப் பற்றியன்றோ செய்வது; இங்கே இருந்து ஊதுகிறேன்" என்று குழலை வாங்கி ஊதினான். (போயிருந்தே - குழலூது) ஒன்றைச் சொல்ல, ஒன்றைச் செய்யாதே; உனக்கபிமதைகள் திரளுகைக்கு நீர் வாய்ப்புள்ள நிலங்களிலே போயிருந்து ஊதாய்.

**விளக்கம்** - (செவியோசை வைத்தெழ) - குழலின் ஓசையைத் தங்கள் காதுகளில் ஏற்பதால், அவர்களை அந்த ஓசையானது கொண்டு வரும்படியாக. (ஆகள் போகவிட்டுக் குழலூது) - பசுக்களை உன்னிடமிருந்து அகன்று செல்லவிட்டு, பின்னர் குழல் ஊதுவாயாக. இதற்கு இவன், "பசுக்களை அவ்விதம் மேய்வதற்காகச் செல்லவிட்டு, பின்னர் பெண்களை அழைக்கும் மறைமுகமான எண்ணத்தில் குழல் ஊதினால், அந்த ஓசையைக் கேட்கும் பசுக்கள், தாங்கள் மேய்வதை நிறுத்தி என்னிடம் வந்துவிடும். அவை பட்டினியாக இருக்குமே?", என்றான். இதற்கு இவள், "நீ இவ்விதம் ஊதும்போது, அந்த ஓசையால் பெண்கள் வருவர். இதன் மூலம் உனது எண்ணமும், பசுக்களின் வயிறும் நிறையும்", என்றாள். இவன், "செவியில் குழலின் ஓசை கேட்டு அவர்களை வரவழைத்தல் என்பது பலனாக உள்ளது. இதற்குக் குழல் ஊதுதல் என்பது ஒரு உபாயமாக உள்ளது. இந்தச் செயலானது மனதிற்கு விருப்பமான விஷயத்தைக் குறித்து உள்ளது. ஆகவே இதனை இங்கேயே செய்கிறேன்", என்று குழலை எடுத்து ஊதினான . (போய் இருந்தே குழல் ஊது) – இதனைக் கண்ட இவள், "நான் ஒன்றைக் கூற, நீ வேறு ஒன்றைச் செய்யக்கூடாது. உனக்கு விருப்பமானவர்கள் சேர்வதற்கான நீர் வளம் நிரைந்த இடங்களில் சென்று ஊதுவாயாக", என்றாள்.

6-2-3. போயிருந்து நின் புள்ளுவம் அறியாதவர்க்கு உரை நம்பீ நின் செய்ய
வாய் இருங் கனியும் கண்களும் விபரீதம் இந் நாள்
வேய் இரும் தடம் தோளினார் இத்திருவருள் பெறுவார் எவர் கொல்
மா இரும் கடலைக் கடைந்த பெருமானாலே

**பொருள்** – இவன் இவர்களிடம், "வேறு சிலர் எனக்கு உள்ளனர் என்றும், அவர்களிடம் சென்று இருப்பாயாக என்றும் என்னிடம் கூறுவது ஏன்? எனக்கு நீங்கள் அல்லாமல் வேறு யார் உள்ளனர்?", என்றான். இதற்கு இவர்கள் கூறுவது, "பெரியதிருமொழி (10-7-4) - கள்வம் பொதியறை - என்பதற்கு ஏற்ப, கள்ளத்தனத்தில் பரிபூர்ணமாக உள்ளவனாகிய நீ, எங்களுடைய கூட்டத்தின் அருகாமையிலிருந்து சென்று, உனக்குப் பிடித்தமான பெண்களுடன் இருந்து, உனது கள்ளத்தனத்தை அறியாதவர்களிடம் இந்தக் கள்ளச் சொற்களைக் கூறுவாயாக. எங்களைப் பொறுத்தவரை உனது சிவந்த உதடுகளாகிய கொண்டாடத்தக்கபடி உள்ள கனிகளும், மற்றவர்களை அழித்தல் என்பதையே இயல்பாகக் கொண்ட உனது திருக்கண்களும், முன்பு போன்று நன்மை விளைவிப்பதாக இல்லாமல், இப்போது பாதிப்பு உண்டாக்கியபடி உள்ளன. இப்படி உள்ளபோது உன்னை இங்கிருந்து தள்ளுவதற்கு அடையாளமாக நாங்கள் காண்பிக்கும் கைகளின் செயல்களை நீ கொண்டாடவேண்டாம். நீ கொண்டாடும் தோள் அழகைக் கொண்டவர்கள் நாங்கள் அல்லர். எல்லையில்லாதபடி பரந்து விரிந்துள்ள ஸமுத்ரத்தைக் கடைந்த எல்லையற்ற சக்தி கொண்ட இவனால், உள்ளம் கலங்கி, வாய்விட்டுப் புலம்பிக் கொண்டாடும்படியான க்ருபையைப் பெற்று, அதற்குக் காரணமாக மூங்கில் போன்று பருத்த நீண்ட தோள்கள் கொண்டவர்கள் யார்?

**அவதாரிகை** - "'குழலூது போயிருந்து' என்றிறே என்னைச் சொல்லுகிறது; உக்தமானது தன்னை அநுஷ்டிக்கும் அத்தனையிறே. இனித்தான் 'உனக்குப் பெண்கள்படும் நீர் வாய்ப்புள்ள இடங்களிலே போயிருந்து ஊது' என்றிறே நீங்கள் சொல்லிற்று; அழகிது, இத்தனையிறே. நீர் வாய்ப்புள்ளவிடந்தான் எது? அத்தைச் சொல்லலாகாதோ?" என்று இரண்டடி உட்புகுரவிட்டு நற்றரிக்க இருந்து, குழலில் இனிய பேச்சிலே கைவைத்தான். குழலோசை போலன்றிறே பேச்சில் இனிமை இருக்கும்படி! "நான் செய்தபடி செய்கிறேன், 'செவியோசை வைத்தெழக் குழலூது

போயிருந்து' என்று நீங்கள் சொன்ன இதுக்குக் கருத்து எனக்குப் போச்சுதில்லை; இது எனக்கு ஜாத்யுசிதவ்ருத்தி அன்றோ?" என்றான்.

**விளக்கம்** - கடந்த பாசுரத்தில் இவர்கள், "குழல் ஊது போய் இருந்து" என்றனர். அடுத்து இந்தப் பாசுரத்தில், "போய் இருந்து நின் புள்ளுவம் அறியாதவர்க்கு உரை" என்றனர். அப்படியானால், இவன் குழல் ஊதுவதை நிறுத்திவிட்டு இவர்களிடம் ஏதேனும் சொற்களைக் கூறியிருக்கவேண்டும் என்றாகிறது. இவ்விதம் இவன் கூறியவை இரண்டாக இருந்திருக்கவேண்டும். "நீர் வாய்ப்புள்ள இடம் என்று கூறினீர்கள். அது எது?", என்று இவன் கேட்பது முதல் வாக்கியம்; இதனை வ்யாக்யானத்தில் "குழல் ஊது" என்பது தொடக்கமாக, "இனிய பேச்சிலே கைவைத்தான்" என்பது முடிய உள்ளதில் கூறுகிறார். அடுத்து, "நான் மனிதர்களில் சிலரை அழைப்பதற்காகக் குழல் ஊதுகிறேனோ? அது என்னுடைய குலத்தொழில் அல்லவோ?" என்று கேட்பது இரண்டாவது வாக்கியம்; இதனை வ்யாக்யானத்தில், "நான் செய்தபடி செய்கிறேன்" என்று தொடங்கி உரைக்கிறார்.

இவன் இவர்களிடம், "'இங்கிருந்து அவர்களிடம் சென்று குழல் ஊதுவாயாக' என்றீர்கள். நீங்கள் கூறியதை அல்லவோ நான் செய்தேன்? அடுத்து நீங்கள் என்னிடம், 'நீ சென்று பெண்கள் வசப்படும் இடங்களிலும், அவர்கள் வசிக்கும் இடங்களிலும் சென்று இருந்து ஊதுவாயாக' என்கிறீர்கள். இது நல்ல அழகு! அப்படிப்பட்ட இடங்கள் எவை என்று நீங்கள் கூறலாம் அல்லவோ?", என்று கூறியபடி இரண்டு அடிகள் முன்னே வந்து, குழலைக் காட்டிலும் இனிமையான தன்னுடைய பேச்சில் அவர்களை ஈடுபடுத்தினான். குழல் ஓசை போன்று பேச்சில் இனிமை உள்ளதாக இவர்கள் உணரவில்லை. இவன் இவர்களிடம், "நான் செய்தபடியே செய்கிறேன். நீங்கள் என்னிடம் 'செவியோசை வைத்து எழ குழல் ஊது போய் இருந்து', என்றீர்கள். இதன் கருத்தை நான் உணரவில்லை. இது என்னுடைய குலத்தொழில் அல்லவோ?", என்றான்.

**வ்யாக்யானம்** - (போயிருந்து நின் புள்ளுவம் அறியாதவர்க்கு உரை நம்பீ) உன் பொய்யிலே பழகின எங்கள் பக்கல் உன் பொய் விலை செல்லாது; இங்கு நின்றும் போய் உன் பொய் அறியாதவர்கள் கோஷ்டியிலே இருந்து சொல்லு. நினைவொன்றும் சொலவொன்றுமான உன்னை அறியாதாரையும் கிடைக்குமிறே;

பஞ்சலக்ஷங் குடியில் பெண்களுண்டாகையாலே. உன் பொய்யை "மெய்" என்றிருக்கும் அவர்களுக்கன்றோ இதெல்லாம் சொல்லுவது? "பொய் கேட்டிருந்தேன்" என்று இருப்பாரையும் கிடைக்குமே.

**விளக்கம்** – (போயிருந்து நின் புள்ளுவம் அறியாதவர்க்கு உரை நம்பீ) – "உன்னுடைய பொய்யில் எப்போதும் பழகியபடி உள்ள எங்களிடம் உனது பொய்கள் செல்லாது. நீ இங்கிருந்து புறப்பட்டுச் சென்று, உனது பொய்கள் குறித்து ஏதும் அறியாத கூட்டத்தில் நின்று உரைப்பாயாக", என்றனர். இதற்கு இவன், "நம்முடைய பொய்கள் குறித்து அறியாதவர்களும் உள்ளனரோ?", என்றான். உடனே இவர்கள், "எண்ணம் ஒன்று, செயல் வேறு ஒன்று என்பதாக உள்ள உன்னை அறியாதவர்கள் கிடைப்பார்கள். ஐந்து லக்ஷம் குடிகளில் பெண்கள் உள்ளனர் அல்லவோ? உன்னுடைய பொய்களை எப்போதும் மெய் என்று எண்ணியபடி உள்ள அவர்களிடம் சென்று அல்லவோ இவை அனைத்தையும் கூறவேண்டும்?", என்றனர். உடனே இவன், "பொய்யை யாரேனும் மெய்யாக எண்ணுவார்களோ?", என்றான். இதற்கு இவள், "பெரியதிருமொழி (9-4-5) – புல்லாணி எம்பெருமான் பொய் கேட்டிருந்தேனே – திருப்புல்லாணியில் உள்ள ஸர்வேச்வரனுடைய பொய்களைக் கேட்டு நான் உயிர் தாங்கி நிற்கிறேன் – என்று கூறுவதற்கு ஏற்ப, அப்படிப்பட்டவர்களும் உள்ளனர் அல்லவோ?", என்றாள்.

**வ்யாக்யானம்** - (நம்பீ) பூர்ணர் அல்லீரோ! உமக்கு எங்களைப் பெறாமல் இருந்தீரோ? தன்னைக் குறித்து இவர்கள் சொல்லுகிற அம்ருதோபமமான நிஷேத வசநங் கேட்டவாறே அவன் முகத்திலே ஓருல்லாஸம் பிறந்தது. (நின் செய்யவாயிருங்கனியும் கண்களும் விபரீதமிந்நாள்) உன்னுடைய சிவந்த அதரமாகிற ச்லாக்யமான கனியும், பிறரை யழிக்கையே ஸ்வபாவமாய் இருக்கும் கண்களும் முன்பு போலே ஹ்ருத்யமா யிருக்கை யன்றிக்கே, இப்போது பாதகமாய் இராநின்றது. நாங்கள் இதுக்கு முன்பு ஒரு நாளும் இச்செவ்வியும் வேறுபாடும் கண்டறியோம்; இவையிருந்தபடி என்? என்றார்கள். "கழுத்துக்கு மேலே ஒன்றைச் சொல்லுகிறிகோளித்தனையன்றோ! அது கிடக்கிடுங்கோள்; இதொரு தோளழகு இருந்தபடியென்?" என்றான். (வேயிருந் தடந்தோளினார் இத்திருவருள் பெறுவார் யவர்கொல்?) ஆரேனும் தோளழகைக் கண்டு, தந்தாம் தோளழகென்று

ப்ரமிக்கும்படிக்கு ஈடான தோளழகு உடையாராரோ? பசுமைக்கும் செவ்வைக்கும் மூங்கில் போலேயாய் நீண்டு சுற்றுடைத்தான தோளையுடையவர்கள்.

**விளக்கம்** – (நம்பீ) – இதனைக் கேட்ட இவன், "நமக்கு அப்படியாக வேறு சிலர் உள்ளனரோ? நாம் உன்னைத் தவிர வேறு யாரையும் அறியமாட்டோம்", என்றான். இதற்கு இவள், "நீ அனைத்துவிதங்களிலும் நிறைவாக உள்ளவன் அல்லவோ? எங்களைப் பெறாமல் நீ குறைவுடன் இருந்தாயோ?", என்றாள். தன்னைக் குறித்து இவர்கள் தள்ளும்படியாகக் கூறும் சொற்கள் இவனுக்கு அமிர்தம் போன்று இருந்தன. ஆகவே அவன் முகத்தில் ஓர் உல்லாஸம் ஏற்பட்டது. இதனைக் கண்ட இவர்கள் கூறத் தொடங்கினார்கள்; (நின் செய்யவாயிருங்கனியும் கண்களும் விபரீதம் இந்நாள்) - இவர்கள் அவனிடம், "இதற்கு முன்பு உனது முகத்தில் இத்தனை ஒரு மலர்ச்சியையும் வேறுபாட்டையும் நாங்கள் கண்டதில்லை. இப்போது இவை எப்படி வந்தன?", என்றனர். இதற்கு இவன், "கழுத்திற்கு மேலே உள்ள கண்கள் மற்றும் வாய் குறித்து உரைக்கிறீர்களே! அவை கிடக்கட்டும். இது என்ன? இப்படி ஒரு தோள் அழகு உங்களுக்கு உள்ளது?", என்றான். (வேயிருந் தடந்தோளினார் இத்திருவருள் பெறுவார் யவர்கொல்?) - இதனைக் கேட்ட இவர்கள், "மூங்கில் போன்ற தோள் அழகு கொண்டவர்கள் என்கிறாய். யாரேனும் தோள் அழகைக் கண்டு, மற்றவர்களுடைய தோள் அழகைக் கண்டது போன்று மயங்கி நிற்கும் அளவிற்குத் தோள் அழகு கொண்டவர்களாக உள்ளனரா? அவர்கள் யாரோ?", என்றனர்.

**வ்யாக்யானம்** - (இத்திருவருள் பெறுவார் யவர் கொல்) நீ கிடந்து இப்படித் துடிக்கும்படி பண்ணவல்லராவதே அவர்கள் சிலவர்! "செய்யவாயிருங்கனியும் கண்களும்" என்றவிடம், அவன்பக்கல் இவர்களுக்கு உண்டான பாவபந்தம் சொல்லுகிறது; "வேயிருந்தடந் தோளினார்" என்றவிடம், இவனுக்கு அவர்கள் பக்கலுள்ள பாவபந்தம் சொல்லுகிறது. இவர்களுக்குத் தன்பக்கல் பாவபந்தம் தந்முகேந அறிந்தான் அவன். தங்கள் பக்கல் இவனுக்குண்டான பாவபந்தம் கைமேலே கண்டுவிட்டார் அவர்கள். (யவர்கொல்) உனக்கு இப்படி ஸ்ப்ருஹணீயதமைகளாய் இருக்குமவர்களாரோ! இவன்பக்கல் ப்ரணய ரோஷத்தாலே சொல்லுகிறாளத்தனைபோக்கி, இவனோடு கலந்தாரைத் தனக்கு உத்தேச்யரென்றிரே இவளிருப்பது. (மாயிருங் கடலைக் கடைந்த பெருமானாலே

இத்திருவருள் பெறுவார் யவர்கொல்) "மந்தரம் நாட்டி அன்று மதுரக் கொழுஞ்சாறு கொண்ட சுந்தரத்தோளுடையான்" என்று சொல்லுகிற தோளழகுடையவன் விரும்பும்படியான தோளழகு படைப்பதே! தன் தோளழகு கண்டு பெண்பிறந்தார் அடங்கலும் படும்பாட்டையடங்கலும் இவன் தன்னைப் படுத்தும்படியான தோளழகுடையார் உண்டாவதே! பெரியவன் கையிலே பெரியது பட்ட பாடு அடங்கலும் தங்கள் கையிலே இவன் படும்படி பண்ணவல்லராவதே! "வைகுண்டதோப்ரமிதமந்தர மூடபாதம்" என்று கொண்டு ஊமைக்கூறனாகப் பட்டதெல்லாம் படுகையிறே. அன்றிக்கே, மந்தரத்தை நட்டுக் கடலை நெருக்கிக் கடைந்து பெரியபிராட்டியாரை லபித்தவன்றும் இவ்வேறுபாடு கண்டிலோமீ! பழையாரைப் பெற்றாற் போலன்றிறே புதியாரைப் பெற்றால் இருக்கும்படி.

**விளக்கம்** - (இத்திருவருள் பெறுவார் யவர் கொல்) - நீ இவ்விதம் கிடந்து துடிக்கும்படிச் செய்வல்லவராக சிலர் உள்ளனரே! "செய்ய" என்பதன் மூலம், அவனிடம் இவளுக்கு ஏற்பட்ட ஈர்ப்பு கூறப்பட்டது. "வேய்" என்பதன் மூலம் இவனுக்கு அவர்களிடம் உள்ள ஈர்ப்பு கூறப்பட்டது. இவர்களுக்குத் தன்னிடம் இது போன்று ஈர்ப்பு உள்ளதை, தனது முகத்தை அவர்கள் கொண்டாடுவதன் மூலம் இவன் அறிந்தான். தங்களிடம் இவனுக்கு ஈர்ப்பு உள்ளதை, தங்களுடைய தோள் அழகை அவன் கொண்டாடுவதன் மூலம் இவர்கள் அறிந்தனர். (யவர்கொல்) - உமக்கு இவ்விதம் விரும்பத்தக்கபடி உள்ள அவர்கள் யார்? ஆனால் இவ்விதம் இவனைப் பலவிதமாகக் கூறாவாளோ என்றால், இவனிடம் உள்ள ப்ரணயகோபம் காரணமாக மட்டுமே இவ்விதம் கூறுகிறாள் மட்டும் அல்லாமல், இவனுடன் சேர்ந்து நிற்பவர்களைத் தனக்கு ஏற்றவர்களாகவே இவள் கொள்பவள் ஆவாள். (மாயிருங் கடலைக் கடைந்த பெருமானாலே இத்திருவருள் பெறுவார் யவர்கொல்) – நாச்சியார் திருமொழி (7-1) - மந்தரம் நாட்டி அன்று மதுரக் கொழுஞ்சாறு கொண்ட சுந்தரத்தோளுடையான் – என்பதற்கு ஏற்ப உள்ள தோள் அழகு கொண்டவன் விரும்பும்படியான தோள் அழகு இங்கு உள்ளதே! தனது தோள்களைக் கண்டு பெண்ணாகப் பிறந்தவர்கள் அனைவரும் தடுமாறியபடி உள்ளனர்; இப்படி உள்ள இவன் தடுமாறும்படியான தோள் அழகு கொண்டபடி உள்ளார்கள். பெரியவனாகிய அவன் கையில் அகப்பட்ட பெரிய மந்தரமலை அடைந்த இடர்கள் அனைத்தையும் தங்கள் திருக்கரங்களில் இவன் அடையும்படிச் செய்தனர். "வைகுண்டநாதனுடைய தோள்களால் சுழன்றபடி

உள்ள மந்தரமலையின் ஒலி” என்பதாகக் கொண்டு அந்த மலையானது கூற இயலாதபடி அடைந்த துன்பங்களை இவன் அடைகிறான். அல்லது வேறுவிதமாகவும் கூறலாம். “மந்த்ரமலையை நிறுத்தி, ஸமுத்ரத்தை நன்கு கடைந்து, பெரிய பிராட்டியாரை அடைந்த அந்த நேரத்தில் கூட இத்தகைய வேறுபாட்டை நாம் காணவில்லை”, என்று இவன் முகத்தில் ஏற்பட்ட உல்லாஸத்தைக் கண்டு இவர்கள் கூறுவதாகவும் கொள்ளலாம். பழையவர்களைப் பெற்றுது போன்று, புதியவர்களை அடையும் நிலை இருப்பதில்லை.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி ஆளவந்தார் அருளிச் செய்த

# ஸ்தோத்ர ரத்னம்

இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை

அருளிச் செய்த வ்யாக்யானம்

(பகுதி – 116)

64. நநு ப்ரபந்நஸ் ஸக்ருத் ஏவ நாத தவ அஹம் அஸ்மி இதி ச யாசமாந:
தவ அநுகம்ப்ய: ஸ்மரத: ப்ரதிஜ்ஞாம் மத் ஏக வர்ஜம் கிம் இதம் வ்ரதம் தே

**பொருள் -** எனது நாதனே! "உன்னை ஒருமுறை சரணம் புகுந்தேன்" என்றும், "நான் உனக்கே என்று இருக்கவேண்டும்" என்றும் உரைத்து உன்னை யாசித்தபடி உள்ள நான், முன்பு விபீஷணன் செய்த சரணாகதி குறித்து உறுதியுடன் எண்ணியபடி உள்ள உன்னால் அருள் செய்யத்தக்கவன் அல்லவோ? உனது இந்த விரதமானது, என் ஒருவனை மட்டும் நீங்கலாக உள்ளதோ?

**அவதாரிகை –** "ஸ்வதந்த்ரரான நாம் சிலர் திறத்தில் ஒன்றைச் செய்தோமென்னா, இதுவே மர்யாதையாகக் கடவதோ?" என்ன, "கடற்கரையிலே ஆச்ரித ஸாமாந்யத்திலே தேவர் பண்ணின ப்ரதிஜ்ஞை என்னையொருவனை ஒழியவோ?" என்கிறார்.

**விளக்கம் –** ஸர்வேச்வரன் ஆளவந்தாரிடம், "மிகுந்த சுதந்திரம் கொண்ட நாம், ஒரு சிலர் விஷயத்தில் ஏதேனும் ஒன்றைச் செய்தால், அதனையே அனைவருக்கும் செய்வதாகக் கொள்ளலாம் அல்லவோ?", என்றான். இதற்கு இவர், "கடற்கரையில் உன்னையே இருப்பிடமாகத் தஞ்சம் புகுந்த விஷயத்தில் நீ செய்து கொடுத்த உறுதிமொழியானது, என்னைத் தவிர்த்து மட்டுமா?", என்கிறார்.

**வ்யாக்யானம் -** (நநு ப்ரபந்ந:) "ஸக்ருதேவ" என்றத்தை ஸ்மரிக்கிறார். (ஸக்ருதேவ) என்றது "ஸஹஸைவ" என்று ஆழ்வான் நிர்வஹிக்கும். "அநாதி காலம்

ஸம்ஸரித்துப் போந்த இவன், ஒரு ஜன்மமெல்லாம் ப்ரபத்தியை அனுஸந்தித்தால்தான் 'ஸக்ருத்' என்கைக்குப் போருமோ?" என்பர் எம்பார். "பகவத் ப்ரபாவத்தைப் பார்த்தால் ஒருகாலுக்குமேல் மிகை. ப்ராப்ய ருசி ப்ராப்தியளவும் அனுவர்த்திக்கும்" என்பர் பட்டர்.

**விளக்கம்** – (நநு ப்ரபந்ந:) - யுத்தகாண்டம் (18-33) – ஸக்ருத் ஏவ – ஒருமுறை சரணம் புகுந்தால் - என்பதை இங்கு நினைவு கூறுகிறார். (ஸக்ருத் ஏவ) - இதனை ஸ்வாமி கூரத்தாழ்வான் "உடனேயே" என்று கூறுவர். இதனை எம்பார், "எல்லையற்ற காலமாக ஸம்ஸாரத்தில் உழன்றபடி இருந்த இவன், ஒரு பிறவி முழுவதிலும் 'சரணம் புகுந்தேன்' என்று கூறினாலும் போதாது அல்லவோ?", என்பார். இதனை பராசரபட்டர், "பகவத் ப்ரபாவத்தை நோக்கும்போது ஒருமுறை சரணாகதி செய்வது கூட அதிகமே ஆகும். ஆனால் அடையப்படவேண்டிய இலக்கின் மீது உள்ள ருசியானது, அதனை அடையும் காலம் முடிய தொடர்ந்தபடியே இருக்கும் அல்லவோ?", என்பார்.

**வ்யாக்யானம்** - (நாத) ஒருகால் பண்ணின ப்ரபத்தி அமைகிறது வகுத்த நாதனாகையாலே. ஆபிமுக்ய மாத்ரமே அமைந்திருக்கிறது, இழவு பேறு தன்னதான குடல் துடக்கு. அசரண்ய விஷயத்தில் ஆர்த்த ப்ரபத்திக்கும் பலம் பாக்ஷிகம். வகுத்த விஷயத்தில் த்ருப்த ப்ரபத்திக்கும் பலவ்யாப்தியுண்டு. (தவாஸ்மீதி ச யாசமாந:) (அஹம் தவாஸ்மி) ப்ரத்யக் வஸ்துவானது கிஞ்சித்கரித்துத் தன் ஸத்தையை லபிக்கவேணுமென்று யாசிக்கை; உத்தரார்த்த ப்ரக்ரியையாலே கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கை. "த்வத் பாத மூலம் சரணம் ப்ரபத்யே" என்று, என்னுடைய வெறுமையை முன்னிட்டுக் கொண்டு ப்ரபத்தி பண்ணினேன். "ஐகாந்திக நித்ய கிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி" என்று ப்ராப்யாபேக்ஷையும் பண்ணினேன். இரண்டு பதத்தாலும் பதத்தாலும் பக்தி ப்ரபத்திகள் இரண்டிலும் அதிகரித்த அதிகாரிகள் இருவரையும் சொல்லுகிறது என்பாருமுண்டு.

**விளக்கம்** – (நாத) - இவன் இயற்கையிலேயே நமக்கு நாதனாக உள்லதால், ஒருமுறை செய்யப்படும் ப்ரபத்தி மட்டுமே போதுமானதாக உள்ளது. நம்மிடம் ஆழ்ந்த ஈடுபாடு மட்டுமே போதுமானதாக உள்ளது; நம்மை இழப்பதும்

பெறுவதும் தன்னுடையதாகவே அவன் கொள்வதாக, அவன் நம்முடன் கொண்டுள்ள ஸம்பந்தம் உள்ளது. சரணம் புகாத இடத்தில் ஆர்த்த ப்ரபத்திக்கும் பலன் இல்லை. இயல்பான விஷயத்தில் த்ருப்த ப்ரபத்திக்கும் கூட பலன் அடைதல் உள்ளது. (அஹம் தவ அஸ்மி) - ஆத்ம வஸ்துவானது மிகவும் தாழ்ந்து நின்று, தனது இருப்பை அளிக்கவேண்டும் என்று யாசித்தல், த்வய மந்த்ரத்தின் இரண்டாவது வரியின் பொருள் மூலமாக கைங்கர்யத்தை வேண்டுதல். “உன்னுடைய திருவடிகளே சரணம் என்று புகுந்தேன்” என்பதாக, எனது வெறுமையை முன்னிறுத்தியவனாக உன்னிடம் பரபத்தி விருப்பத்தையும் செய்தேன். இந்த இரண்டின் மூலமும், பக்தி மற்றும் ப்ரபத்தி ஆகிய இரண்டிலும் ஈடுபட்ட அதிகாரிகள் கூறப்பட்டனர் என்று கூறுபவர்களும் உண்டு.

**வ்யாக்யானம்** - (ப்ரதிஜ்ஞாம் ஸ்மரதஸ் தவ அநுகம்ப்ய:) “ஏதத் வ்ரதம் மம” என்று கடற்கரையில் பண்ணின ப்ரதிஜ்ஞையை ஸ்மரியா நின்றுகொண்டு தேவருக்கு அனுக்ராஹ்யன். (தே வ்ரதமிதம் மதேகவர்ஜம் கிம்) ஸர்வஸாதாரணபூதரான தேவருடைய அஸாதாரணமான இந்த ஸங்கல்பம் என்னையொழிந்திருக்குமோ? கிம் க்ஷேபே. “இன்னானையொழிய” என்று விசேஷித்ததாகிலன்றோ எனக்கு இழக்க வேண்டுவது. தேவர் ஸத்யஸங்கல்பராகையால் என்னை ரக்ஷித்தருள வேணுமென்கை.

**விளக்கம்** - (ப்ரதிஜ்ஞாம் ஸ்மரதஸ் தவ அநுகம்ப்ய:) - யுத்தகாண்டம் (18-33) – ஏதத் வ்ரதம் மம – இதுவே எனது வ்ரதம் – என்று கடற்கரையில் நீ உரைத்த உறுதிமொழியை எண்ணியபடி உள்ள உனக்கு நான் அனுக்ரஹம் செய்யத்தக்கவன் ஆவேன். (தே வ்ரதமிதம் மதேகவர்ஜம் கிம்) - அனைவருக்கும் பொதுவாக உள்ள உன்னுடைய, இந்த அனைவருக்கும் பொதுவாக உள்ள இந்த ஸங்கல்பமானது, என்னைத் தவிர்த்து உள்ளதா? “இவனைத் தவிர” என்று என்னை நீ சிறப்பித்தும் கூறியிருந்தால் அல்லவோ என்னைக் கைவிட இயலும்? நீ ஸத்யஸங்கல்பன் என்பதால் என்னைக் காப்பாற்றி கடாக்ஷிக்கவேண்டும்.

ஸ்வாமி ஆளவந்தார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்